بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*
*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*
*அவர்கள் 18.05.2018 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

**தஷஹ்ஹுத், தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு முன் இருந்த மக்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டதைப் போன்று நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்வதற்காக உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ்வின் அருளால் நமக்கு இன்னொரு ரமலானை கடக்கும் வாய்ப்பு கிடைத்து வருகிறது. நேற்றிலிருந்து ரமலான் ஆரம்பமாகி உள்ளது. இந்த மாதத்தில் முஸ்லிம்களில் பெரும்பாலார் நோன்புடன் பள்ளிவாயிலில் தொழுகைகள் மற்றும் துஆவிற்காக வருகின்றனர். அதில் கவனம் ஏற்படுகிறது. நமது பள்ளிவாயில்களில் கூட மற்ற நாட்களை விட அதிகமாக மக்கள் வருகின்றனர். நான் ஓதிய வசனம் தற்போது MTA –விலும் நினைவூட்டுவதற்காக அதிகமாக ஓதப்படுகிறது. நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளதன் நோக்கம் இறையச்சம் பெறுவதாகும். முந்தைய மார்க்கங்களிலும் நோன்பு கடமையாக்கப்பட்டிருந்தது. அதன் நோக்கமும் இறையச்சம் பெறுவதே ஆகும். தற்போது அம்மார்க்கங்களை ஏற்றுக் கொண்டவர்களிடம் அந்த போதனைகள் பெயரளவிலும் இல்லை; செயலளவிலும் இல்லை. அவர்களிடம் இறையச்சம் இல்லை. ஆனால், இஸ்லாம் ஒரு நிரந்தரமான மார்க்கமாகும். மறுமை வரை நிலைநிற்கக்கூடிய மார்க்கம் ஆகும். அதன் போதனை நிரந்தரமானதாகும்.

ஆகவே, ரமலானில் நாம் தக்வாவைப் பெறுவதற்காக முயற்சி செய்கிறோம். அல்லது முயற்சி செய்பவர்களாக இருக்கிறோம் எனில், நமது இறை வணக்கத்தில் கவனம் ஏற்படும். நாம் தக்வாவின்படி நடக்க முயற்சி செய்வோம் எனில், நோன்பு வைப்போம் எனில், பாவத்திலிருந்து தப்புவதற்கு முயற்சி செய்வோம் எனில், அல்லாஹ்வின் கட்டளைகளைத் தேடி அமல் செய்வதற்கு கவனம் பிறக்கும். நாம் தீமைகளிலிருந்து தப்பிக்கவில்லை எனில், தீமைகள் நமது வாழ்வில் தாக்கம் ஏற்படுத்துகின்றன எனில் அல்லது மற்றவர் மீது தாக்கம் ஏற்படுத்துகின்றது எனில் அதனை விடுவதன் மூலமே நோன்பின் நோக்கம் நிறைவேறும். நாம் அவற்றை விடவில்லை எனில் நோன்பின் நோக்கம் நிறைவேறாது. இதுவே தக்வாவாகும். நாம் நோன்பு பிடித்தும்கூட நம்மிடம் தற்பெருமை இருக்கும் எனில், நமது பணிகளில் நமக்கு அதிகமான பெருமை இருக்கும் எனில், சுயநலம் பேணும் வழக்கம் இருக்கும் எனில், மக்களால் பாராட்டப்பட வேண்டும் என்ற விருப்பம் இருக்கும் எனில் தமக்கு கீழுள்ளவர்கள் தம்மை புகழ வேண்டும் என்று ஆசைப்பட்டால், அவர்கள் பாராட்டினால் அதில் மகிழ்ச்சி அடைந்தால் அல்லது அதற்காக விரும்பினால் அது தக்வா இல்லை.

நோன்பில் சண்டை, சச்சரவு, பொய், குழப்பம் விளைவித்தல்களிலிருந்து தப்பிக்கவில்லை எனில் தக்வா இல்லை. நோன்பில் இறை வணக்கம் மற்றும் துஆவிலும், நற்செயல்களிலும் நேரத்தை செலவழிக்கவில்லை எனில் தக்வா இல்லை. நோன்பின் நோக்கத்தை நாம் நிறைவேற்றவில்லை. ஆகவே, ரமாலானில் தீமைகளை விட்டு விடுவது, நன்மைகளை மேற்கொள்வதன் மூலம்தான் நோன்பின் நோக்கம் நிறைவேறும். மனிதன் இதில் உறுதியாக நிற்க முயற்சி செய்தால் பிறகு, தான் உண்மையில் நோன்பின் நோக்கத்தை நிறைவேற்றியவர் ஆவார். அது அல்லாமல் வெறும் பட்டினி கிடப்பதுதான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்: நீங்கள் உங்களைக் குறித்து ஆய்வு செய்யவில்லை எனில் நீங்கள் வெறுமனே பட்டினி கிடப்பதில் அல்லாஹ்வுக்கு எந்த தேவையும் இல்லை.

சிலர் நோன்பின் பெயராலேயே பொய் சொல்கிறார்கள். பசியுடன் கூட இருப்பதில்லை. நான் நோன்பு வைத்துள்ளேன் என்று கூறுகிறார்கள். ஆனால் நோன்பு வைப்பதில்லை. அவர்கள் தமது உணவு, பானத்தில் இருந்தும் கூட விலகி இருக்கவில்லை. அத்தகையோர் மற்ற விஷயங்களில் தமது நஃப்ஸை எவ்வாறு அடக்கி வைப்பார்கள். நேற்று ஒரு விஷயம் முஸ்லிம்களின் நோன்புகள் குறித்து ஓர் ஆய்வு வெளியாகி உள்ளது. அதில் அவர்கள் விளக்கியுள்ளார்கள். பெரும்பாலான இளைஞர்கள் காட்டுவதற்காக நோன்பு வைக்கின்றனர். அவர்களுக்கு நோன்பின் நோக்கம் குறித்து எதுவும் தெரியவில்லை. ஆகவே, அஹ்மதிகளுக்கு பெரும் பொறுப்பு உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு அல்லாஹ் எவ்வாறு நோன்பின் கடமைகளை நிறைவேற்றுமாறு கட்டளையிட்டானோ அவ்வாறு அதன் கடமைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். தக்வா என்றால் என்ன என்பதை புரிய முயல வேண்டும். மேலும் அதனை நாம் எவ்வாறு பெற வேண்டும்? என்பதை புரிய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல்வேறு

சந்தர்ப்பங்களில் தக்வா சம்பந்தமாக தக்வா உள்ளவர் யார் என்று கூறியுள்ளார்கள். உண்மையான நிம்மதியும் ரசனையும் தக்வா மூலமே பிறக்கிறது. உலக ரசனைகளில் எந்த இன்பமும் இல்லை. எவ்வாறு நாம் நன்மைகளை செய்ய வேண்டும்? மனிதன் உண்மையான முஃமின் ஆவதற்கு தமது ஒவ்வொரு பணியையும் அவனது திருப்தியைப் பெறுவதற்காக செய்ய வேண்டும். இதுவே ஒரு முஃமினையும் காஃபிரையும் வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது என்று அன்னார் கூறியுள்ளார்கள். மனிதன் இறை ஞானத்தில் முன்னேற்றம் பெறவும் இதனை செய்ய வேண்டும் என்றார்கள். வரக்கூடிய ஒவ்வொரு நாளும் நமது இறை ஞானத்தில் முன்னேற்றம் பெற வேண்டும். அதே இடத்தில் நின்று வருபவர்களாக இருக்கக் கூடாது. சமுதாயத்தின் அழுத்தத்திற்காக, பிறருக்கு காட்டுவதற்காக நோன்பு வைப்பவர்களாகவும் இருக்கக் கூடாது. நான் முன்னர் உதாரணமாக கூறிய மனிதர்கள் போன்று இல்லாமல் தக்வாவில் முன்னேறுபவர்களாக இருக்க வேண்டும். நான் தக்வாவில் முன்னேறுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பல்வேறு மேற்கோள்களைக் கூறுகிறேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக தக்வாவில் செல்வதற்கு போதனை செய்தவாறு தனது ஓர் இல்ஹாமை குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள். முந்தைய எல்லா பரிசுத்தமான இறை வேதங்களின் சுருக்கம் தக்வாதான் என்று கூறியவாறு விளக்குகிறார்கள்: நேற்று அதாவது 22 ஜுன் 1899 அன்று எனக்கு அல்லாஹ்விடமிருந்து பலமுறை இந்த இல்ஹாம் வந்தது. நீங்கள் இறையச்சம் உள்ளவர்கள் ஆகுங்கள். தக்வாவின் நுட்பமான வழிகளில் செல்லுங்கள். அல்லாஹ் உங்களுடன் இருப்பான்.

அன்னார் கூறுகிறார்கள்: இதனால் என் உள்ளத்தில் பெரும் கவலை ஏற்பட்டது. நான் என்ன செய்வேன்? ஜமாஅத் உண்மையான தக்வா மற்றும் தூய்மையைப் பெற வேண்டும். மேலும் கூறுகிறார்கள்: நான் எவ்வளவு துஆ செய்கிறேன் எனில் துஆ செய்து செய்து மிகவும் பலவீனமாகி விடுகிறேன். சில நேரங்களில் இதனால் மயக்கமும அழிவும் வந்து விடும் அளவிற்கு நிலைமை ஆகி விடுகிறது. மேலும் ஒரு ஜமாஅத் இறைவனின் பார்வையில் இறையச்சமுள்ளவர்களாக ஆகாத வரை இறைவனின் உதவிகள் அவர்களுக்கு கிடைக்க முடியாது. மேலும் அன்னார் கூறினார்கள்: எனது ஜமாஅத்தில் ஒவ்வொரு தனி மனிதரும் தக்வாவின் படி செல்பவராக இருக்க வேண்டும். அவர்களை உலகியல் கவலை தின்று விடக் கூடாது. மேலும், தக்வாவின் படி செல்வதே ஷரீஅத்தின் சுருக்கமாகும்.

நீங்கள் துஆ ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் என விரும்பினால் தக்வாவின் படி செயல்படுங்கள் என்று கூறியவாறு அன்னார் விளக்குகிறார்கள்: நீங்கள் தக்வாவின் வழியை மேற்கொள்ளுங்கள். ஏனெனில், தக்வா எத்தகைய விஷயம் எனில் அதனை ஷரீஅத்தின் சுருக்கம் என்று கூறலாம். தொடர்ந்து அஹ்மதிகளை விளித்து அன்னார் கூறுகிறார்கள்: ஷரீஅத்தை சுருக்கமாக கூறுவதாயின், ஷரீஅத்தின் சத்து தக்வாவே ஆகும். தக்வாவின் படித்தரங்கள் நிறைய உள்ளன. ஆனால் உண்மையின் தேட்டம் உள்ளவராக ஆரம்ப படித்தரங்களை உறுதியுடன் நிறைவேற்றினால், அந்த நன்னம்பிக்கை மற்றும் களங்கமின்மை காரணமாக உயர் தரத்தை பெற்று விடுவார். நிரந்தர தன்மையுடன் சிறிய மற்றும் பெரிய எல்லா நன்மைகளிலும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

ஆகவே, துஆ ஒப்புக் கொள்ளப்படுபவதற்கு தக்வா ஓர் அடிப்படையான நிபந்தனையாகும். அதனை மாற்ற முடியாது. துஆ ஒப்புக் கொள்ளப்பட தக்வா எந்நிலையிலும் மிக மிக அவசியமானதாகும். அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு மனிதன் கவனமற்றவனாகவும் வழி தவறியவனாகவும் இருந்து கொண்டு துஆ ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்பினால் அவன் ஒரு முட்டாளும் அறிவற்றவனும் அல்லவா?

எனவே, நமது ஜமாஅத்தில் ஒவ்வொருவரும் முடிந்தவரை தக்வாவின் வழியில் அடியெடுத்து வைக்க வேண்டும்? அதன் மூலம் துஆ கண்டிப்பாக ஒப்புக் கொள்ளப்படும். மேலும் ஈமான் அதிகமாகவும் செய்யும். ஆகவே, ரமலானில் இருந்து பலன் பெற இது அடிப்படை மருந்து ஆகும். நமது நோன்பு மற்றும் நமது ஒவ்வொரு செயலும் தக்வாவைப் பெறுவதற்காகவே இருக்க வேண்டும். நாங்கள் நிறைய துஆ செய்தோம். ஏற்றுக் கொள்ளப்படவே இல்லை என்று அதிகமானவர்கள் கூறுகின்றனர். அவர்கள் முதலில் தமக்குள் பார்க்க வேண்டும். தமக்குள் மார்க்கம் மிகைத்துள்ளதா? தக்வாவின்படி நாம் இருக்கிறோமா? அல்லது உலகியல் கலப்பு உள்ளதா? என தம்மைத் தாமே ஆய்வு செய்ய வேண்டும். துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு இதுவும் ஒரு நிபந்தனையாகும்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: உள்ளபடியே இறையச்சம் உள்ளவர்களுக்கு பெரும் வாக்குறுதிகள் உள்ளன. அதனை விட அதிகமாக என்ன வேண்டும்? அதவாது அல்லாஹ் இறையச்சம் உள்ளவரின் வலி ஆக இருக்கிறான். இறைவனிடம் நாங்கள் நெருக்கத்தைப் பெற்றுள்ளோம் என்று கூறக்கூடிய ஒருவரிடம் தக்வா இல்லையெனில் அவர் பொய்யர் ஆவார். இன்னும் சொல்வதாயின், அவர் கட்டுப்படாமையும் பாவத்திலும் வாழ்வை கழிப்பவர் ஆவார். அதனை அழிப்பதற்கான வழி தக்வாவை மேற்கொள்வதாகும். தக்வாவின் மூலமே அந்த வாழ்வை கழித்து நல் விளைவைப் பெற முடியும்.

அவர்கள் கூறுகிறார்கள்: பொருளாதார நெருக்கடி மற்றும் மற்ற நெருக்கடியில் இருந்து விடுபடும் வழி தக்வாவே ஆகும். அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ் இறையச்சம் உள்ளவருக்கு ஒவ்வொரு பிரச்சனையில் இருந்தும் வெளியேற்றத்தை வழங்குகிறான். அவருக்கு மறைவில் இருந்து மாசற்ற வாழ்விற்கான வழியை ஏற்பாடு செய்து தருகிறான். அவருக்கு தெரியாத இடத்திலிருந்து அவருக்கு வாழ்வாதாரம் வழங்குகிறான். அவர்கள் கூறுகிறார்கள்: மிகவும் சிந்தித்துப் பாருங்கள். மனிதன் உலகில் விரும்புவது என்ன? மனிதன் உலகில் விரும்பும் பெரும் விருப்பம் இதுவே ஆகும். அதாவது, சுகமும் நிம்மதியும் வேண்டும். அதற்காக அல்லாஹ் ஒரே ஒரு வழியைத்தான் வைத்துள்ளான். அது தக்வாவின் வழி என்று அழைக்கப்படுகிறது. இன்னொரு வார்த்தையில் அதனை திருக்குர்ஆனின் வழி என்று கூறப்படுகிறது. அல்லது அதனை ஸிராத்தல் முஸ்தகீம் என்று கூறலாம். குஃப்பார்களிடம் செல்வமும், பொருள்களும் இருக்கின்றன என்று ஒருவர் கூறலாம். அவர்கள் அதன் மூலம் உல்லாசமாக வாழ்கிறார்களே? என்று கூறலாம்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் உண்மையாகவே கூறுகிறேன். அவர்கள் உலகத்தின் பார்வையில் இன்னும் சொல்வதாயின், கீழ்நிலையில் உள்ள உலகின் பார்வையில் வெளிப்படையானதை வணங்குபவர்களின் பார்வையில் அது மகிழ்ச்சிக்குரியதாக தென்படுகிறது. ஆனால், உண்மையில் அவர்கள் ஒரு எரிச்சலில் வேதனையில் பிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் தோற்றத்தை நீங்கள் பார்க்கிறீர்கள். நான் அத்தகையோரின் உள்ளத்தை பார்க்கிறேன். அவர்கள் ஒரு நெருப்பில் எரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அல்லாஹ் கூறுவது போன்று இன்னா அஷதர்னல் காஃபிரீன ஸலாஸிய வஅக்லாளன் வஸஇரா. நிச்சயமாக நான் காஃபிர்களுக்கு விலங்குகளைக் கொண்ட நரகத்தை தயார் செய்துள்ளோம். அவர்கள் நன்மையின் பக்கம் வரவே முடியாது. அது எத்தகைய விலங்குகள் எனில் இறைவன் பக்கம் வர முடியாமல் எத்தகைய அழுத்தம் ஏற்படுகின்றது எனில் அவர்களின் நிலை மிருகங்களை விட மோசமாகி விடுகிறது. அவர்களின் கண்கள் எப்போதும் உலகின் பக்கமே குனிந்துள்ளது. பூமியின் பக்கம் குனிந்துள்ளது. உள்ளுக்குள்ளேயே ஒரு சூடும் எரிச்சலும் அவர்களை எரித்துக் கொண்டிருக்கிறது. அவர்களின் செல்வத்தில் குறைவு ஏற்பட்டால் வழக்கப்படி நடக்க வேண்டியதில் மாற்றம் ஏற்பட்டால் அவர்கள் எரிகிறார்கள். எந்த அளவுக்கு எனில் அதனால் அவர்கள் பைத்தியமாகி விடுகிறார்கள். நீதிமன்றங்களுக்கு மாறி மாறிச் செல்லத் தொடங்குகின்றனர். உள்ளபடி ஒரு மார்க்கமற்ற மனிதன் ஒரு நெருப்பை விட குறைந்தவன் அல்லன். அவன் தனது நெருப்பினால் எரிந்து கொண்டு இருக்கிறான். இவ்வாறான பல காட்சிகளை நாம் செய்தித்தாள்களில் பார்க்கிறோம். அவர்களுக்கு நிம்மதியும் நிலைப்பாடும் கிடைப்பதில்லை. அது ஆறுதலான மகிழ்ச்சியான வாழ்வின் மூலமே கிடைக்க முடியும்.

உண்மையான இன்பமும் ரசனையும் தக்வாவைச் சார்ந்தது என்பதை விளக்கியவாறு அன்னார் கூறுகிறார்கள்: ஓர் இறையச்சம் உள்ளவர் நல்ல மகிழ்ச்சியை ஒரு குடிசையில் கூட பெற முடியும். ஆனால், உல்லாசப் பிரியரான ஒரு உலகியல்வாதிக்கு மகத்தான ஒரு மாளிகையில் கூட அது கிடைக்க முடியாது. தன்னிறைவும் தக்வாவும் வாழ்வின் நோக்கமாக இருந்தால் பெரிய பெரிய செல்வந்தர்களினால் அதனை பெற முடியாத நிலையில் குறைவான வசதிகளில் கூட மனிதன் நன்றாக வாழ முடியும். நிம்மதியும் இரசனையும் பெற முடியும்.

நோன்பு சம்பந்தமாக ஒரு ஹதீஸ் உள்ளது. நோன்பாளி தமது நாவை தூய்மையாக வைக்க வேண்டும். சண்டை சச்சரவு வந்தால் நான் நோன்பாளி என்று கூற வேண்டும். உமது இந்த வார்த்தைகளுக்கு என்னால் பதில் தர இயலாது என்று கூற வேண்டும். மிக நுட்பமான பிரச்சனைகள் நாவினால் உருவாகின்றன. பெரும்பாலும் தக்வாவில் இருந்து விலகி ஒரு விஷயத்தைக் கூறும்போது ஒருவர் அதில் மகிழ்ச்சி அடைகிறார். நான் இவ்வாறு கூறி விட்டேன். இவ்வாறு கூறினேன் என்கிறார். ஆனால் அது தீயதாக இருக்கிறது.

அவர்கள் கூறுகிறார்கள்: பாருங்கள். அல்லாஹ் இய்யாக்க நஃபுது என்ற போதனையை வழங்கியுள்ளான். மனிதன் தனது சக்திகளை முற்றிலும் நம்பி விடக் கூடாது என்பதற்காகவும், இறைவனை விட்டு தூர விலகிப் போய் விடலாம் என்பதால்தான் வஇய்யாக நஸ்தயீன் என்பதையும் சேர்த்து கூறியுள்ளான். நான் இறை வணக்கம் செய்கிறேன் என்றால் எனக்கு சக்தி இருக்கிறது என்பதால் செய்கிறேன் என்று நினைக்காதீர்கள். மாறாக, அல்லாஹ்வின் உதவி இல்லை என்றால், அவனது தூய இருப்பு உங்களுக்கு வாய்ப்பும் தகுதியும் வழங்கவில்லை என்றால் ஒன்றும் செய்ய முடியாது. இய்யாக அஃபுது என்று கூறவில்லை. இதில் தனது நஃப்ஸின் முற்படுத்துதலின் வாடை வருகிறது. அதாவது நான் ஏதோ செய்கிறேன் என்ற எண்ணம் வருகிறது. அதுவும் தக்வாவுக்கு எதிரானதாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: தக்வா மனிதனை முழுமையாக எடுத்துக் கொள்கிறது. நாவினால் மனிதன் தக்வாவில் இருந்து விலகி விடுகிறான். ஒவ்வொரு விவகாரத்திலும் தக்வா அவசியமாகும். நாவினால் மனிதன் தக்வாவில் இருந்து விலகி விடுகிறான். மனிதன் நாவினால் தற்பெருமையாக பேசுகிறான். நாவினால்தான் ஃபிர்அவ்னிய பண்பு உருவாகிறது. பெரும்பாலான மக்கள் வாதம் செய்கிறார்கள். அதேபோன்று நாவினால்தான் மறைவான செயல்களை

பகட்டான காரியங்களாக மனிதன் ஆக்கி விடுகிறான். நாவிலிருந்து வீணான விஷயங்கள் மிக விரைவாக வெளிப்படுகின்றன.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் இறையச்சம் மற்றும் தூய்மையில் எந்த அளவு முன்னேறி உள்ளோம் என்று கவனிக்க வேண்டும். அதன் அளவுகோல் திருக்குர்ஆன் ஆகும். அல்லாஹ் இறையச்சமுடையவரின் அடையாளங்களுள் ஒன்றாக, அவர்களை அல்லாஹ் உலகின் வெறுக்கத்தக்க விஷயங்களிலிருந்து அவரது பணிகளுக்கு தாமே பொறுப்பேற்றுக் கொள்வதாக கூறுகின்றான்.

அவன் கூறுகின்றான்: எவர் இறைவனுக்கு பயப்படுகிறாரோ அவரை ஒவ்வொரு கஷ்டத்திலிருந்தும் தூய வழியில் வெளியேற்றி விடுகிறான். அவர் நினைக்காத இடத்திலிருந்து அவருக்கு வாழ்வாதாரத்தை ஏற்பாடு செய்து தருகிறான். இறையச்சம் உள்ளவருக்கு இதுவும் ஓர் அடையாளமாகும். அவர் கண்ணியமற்ற பணிகள் செய்யும் அவசியத்தை அவன் தருவதில்லை. அவருக்கு அவன் பொருள்களை தருகிறான். இலக்கற்ற ஆசைகள் அவரது உள்ளத்தில் உருவாவதில்லை. அவை அவரை தேவை உடையவராக ஆக்குவதில்லை. அந்த எண்ணங்கள் வருவதில்லை. இதுவும் தக்வாவின் அடையாளமாகும். இது அல்லாஹ் ஓர் இறையச்சமுள்ளவருடன் நடந்து கொள்ளும் ஒரு நடைமுறையாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு கடைக்காரர் பொய் சொல்லாமல் தனது பணி நடைபெறாது என்று நினைக்கிறார். எனவே அவர் பொய் சொல்வதிலிருந்து திரும்புவதில்லை. பொய் சொல்வதற்காக நிர்பந்தத்தை வெளிப்படுத்துகிறார். ஆனால் இதில் ஒருபோதும் உண்மை இல்லை. அல்லாஹ் இறையச்சம் உள்ளவருக்கு தானே பாதுகாவலன் ஆகி விடுகிறான். உண்மைக்கு எதிராக நிர்பந்தப்படுத்துகிற சந்தர்ப்பங்களிலிருந்து அவரை விலக்கி விடுகிறான். அதாவது பொய் சொல்வதற்காக வாய்ப்பு ஏற்பட விடாமல் பார்த்துக் கொள்கிறான்.

அவர்கள் கூறுகிறார்கள்: எவர் அல்லாஹ்வை விட்டு விட்டாரோ அவரை அல்லாஹ்வும் விட்டு விட்டான். ரஹ்மான் அவரை விட்டு விட்டால் பிறகு ஷய்த்தான் அவருடன் இணைந்து கொள்கிறான்.

அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் பலவீனமானவன் என்று நினைக்காதீர்கள். அவன் பெரும் ஆற்றல் பெற்றவன் ஆவான். அவன் மீது ஒரு விஷயத்தில் நம்பிக்கை வைப்பீர்கள் என்றால் அவன் நிச்சயமாக உங்களுக்கு உதவி செய்வான். வமன் யத்தவக்கல் அலல்லாஹி வஹுவ ஹஸ்புஹு – எவர் அல்லாஹ் மீது தவக்குல் வைப்பாரோ அவருக்கு அவனே போதுமானவனாகி விடுகிறான். எவர் இந்த வசனத்திற்கு முன் கூறப்பட்டிருந்தார்களோ அவர்கள் மார்க்கவாதிகள் ஆவர். அவர்களின் எல்லா கவலைகளும் மார்க்கத்திற்காக இருக்கின்றன. உலகயில் காரியங்களுக்காக அவர்கள் அல்லாஹ்விடம் பொறுப்பை தந்தவர்களாக இருக்கின்றனர். எனவே அல்லாய் அவர்களுக்கு நான் உங்களுடன் இருக்கிறேன் என்று ஆறுதல் வழங்கினான்.

அன்னார் கூறுகிறார்கள்: தக்வாவை மேற்கொள்பவர்களுக்கு அல்லாஹ்வின் உதவிகள் கிடைக்கின்றன. தக்வாவை மேற்கொள்ளுங்கள். தக்வா என்பது தீமையிலிருந்து விலகுவதாகும். முஹ்ஸின் என்பவர் தீமையிலிருந்து விலகுபவர் மட்டுமல்ல. அவர் நன்மையும் செய்கிறார்.

மேலும் கூறுகிறார்கள்: லில்லதீன அஹ்ஸனுல் ஹுஸ்னா – நன்மைகளை நன்றாக கவனித்து செய்பவர் ஆவார். இந்த வசனத்துக்கு விளக்கம் தருகிறார்கள். இன்னல்லாஹ மஅல்லஸீனத்தக்கவ் வல்லஸீனஹும் முஹ்ஸினூன். எனக்கு இந்த வஹி மீண்டும் மீண்டும் வந்தது. இது எத்தனை முறை வந்தது என்று என்னால் எண்ண முடியவில்லை. இறைவனே அறிவான். இரண்டாயிரம் முறை வந்திருக்கலாம். இதன் நோக்கம் என்னவெனில், ஜமாத்திற்கு தெரிய வேண்டும். இவ்விஷயத்தில் அவர்கள் ஏமாந்து விடக் கூடாது. நாம் இந்த ஜமாஅத்தில் சேர்ந்து விட்டோம் என்று அவர்கள் திருப்தி அடைந்து விடக் கூடாது. அல்லது நல்லெண்ணத்தில் ஈமானில் திருப்தி அடைந்து விடக் கூடாது. அல்லாஹ்வின் அருகாமை கிடைப்பதற்கு உண்மையான தக்வா இருக்க வேண்டும். அத்துடன் நன்மையும் இருக்க வேண்டும். இன்னல்லாஹ மஅல்லஸீனத்தக்கவ் வல்லஸீனஹும் முஹ்ஸினூன் என்பதன் பொருள். நிச்சயமாக தக்வாவை மேற்கொள்பவர்களுடன் அல்லாஹ் இருக்கிறான். மேலும் அவர்கள் கருணை காட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள். மேலும் அல்லாஹ்வின் அருகாமையும் உதவியும் எப்போது கிடைக்கும் எனில் உண்மையான தக்வாவும் அத்துடன் நற்செயல்களும் இருக்க வேண்டும். இன்னல்லாஹ மஅல்லஸீனத்தக்கவ் வல்லஸீனஹும் முஹ்ஸினூன் அல்லாஹ் மனிதனின் செயலுக்கான ஒரு நாட்குறிப்பேட்டை உருவாக்குகிறான்.

மேலும் அன்னார் அது குறித்து கூறுகிறார்கள்: மனிதன் தானும், தனது நிலைகள் குறித்து ஒரு குறிப்பேடு வைக்க வேண்டும். தான் நன்மையில் எந்த அளவுக்கு முன்னேறினோம் என்று பார்க்க வேண்டும். மனிதனது நேற்றும் இன்றும் ஒன்று போல் இருக்கக் கூடாது. நேற்றைக்கும் இன்றைக்கும் என்ன வித்தியாசம் உள்ளது? என்று பார்க்க வேண்டும். முன்னேறவும் இல்லை எனில் அவர் நஷ்டத்தில் இருக்கிறார். மனிதன் இறைவனை ஏற்றுக் கொள்பவராகவும் அவன்

மீது முழுமையான நம்பிக்கை உள்ளவராகவும் இருந்தால் அவர் வீணாக்கப்பட மாட்டார். அத்தகைய ஒருவருக்காக இலட்சக்கணக்கானோர் பாதுகாப்பபடுகின்றனர். அன்னார் கூறுகிறார்கள்: இவை வெறும் வாய் வார்த்தைகளைக் கொண்டு நடக்காது. இதற்காக உழைப்பு தேவையாகும்.

அன்னார் கூறுகிறார்கள். என்னுடன் அல்லாஹ் வாக்களித்துள்ளான். இன்னீ உஹாஃபிஸூ குல்ல மன்ஃபித்தார். இதற்காக நீங்களும் முதலில் தக்வாவை மேற்கொள்வது அவசியமாகும். எனது துஆவின் கபூலிய்யத்திற்காக அல்லாஹ் கூறினான். ஆனால் அதில் பங்கு பெறுவதற்கு நீங்கள் உங்களை தகுதியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உங்களுக்காகவும் ஒப்புக் கொள்ளப்படும். அதற்காக தக்வா அவசியமானது. அல்லாஹ் இந்த தக்வாவுடைய நோன்பை நோற்பதற்கும் ரமலானில் படி கடமைகளை நிறைவேற்றவும் வாய்ப்பு தருவானாக. எல்லா வகையிலும் இது பரக்கத்துக்குரிய ரமலான் ஆக இருக்கட்டுமாக. முஸ்லிம்களும் உலகத்திற்குகாகவும் குறிப்பாக துஆ செய்யுங்கள். பாகிஸ்தானின் ஜமாஅத்தின் நிலைக்காக துஆசெய்யுங்கள். அதிகமாக கடுமை காட்டப்படுகிறது. அல்லாஹ் அருள் புரிவானாக. இங்கு நோன்பின் கடமைகளை நிறைவேற்றி, தக்வாவின் படி நடந்தவாறு கடமைகளை நிறைவேற்றுபவராக இருப்போமாக. மேலும் துஆவில் கவனம் செலுத்தப்பவராக இருப்போமாக. அல்லாஹ் முஸ்லிம்கள் மீது கருணை காட்டுபவானாக. அவர்களின் ஆட்சியாளர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள், அவர்களின் மார்க்க அறிஞர்களுக்கு சிந்திக்கும் திறனை வழங்குவானாக. அவர்கள் காலத்தின் இமாமை ஏற்பார்களாக.

அதுபோன்று உலகிலும் ஒவ்வொரு நாளும் ஒரு செய்தி வருகிறது. தினமும் போர் சவால் மூட்டப்படுகிறது என்றும் இன்று முடியப் போகிறது என்றும் செய்திகள் வருகிறது. பெரிய சக்திகள் போரின் பக்கம் செல்வதாகவே தெரிகிறது. அதில் எந்த தடையும் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தெரியவில்லை. எனவே அல்லாஹ் முஸ்லிம்களுக்கும் குறிப்பாக அஹ்மதிகளுக்கும் இந்த போரின் தீய தாக்கத்திலிருந்து பாதுகாப்பு வழங்குவானாக. பொதுவாக மனித இனத்தை இதன் தீய தாக்கத்திலிருந்து பாதுகாப்பானாக. இப்போதும் கூட அல்லாஹ்விடம் இம்மக்களுக்கு சீர்திருத்தம் ஏற்பட வழி இருக்கும் எனில் அல்லாஹ் அதனை ஏற்படுத்துவானாக. அவர்கள் அல்லாஹ்வை அறிந்து கொள்பவர்களாக ஆவார்களாக. அல்லாஹ்வை அறிந்து கொள்ளும் நிலையை அல்லாஹ் உருவாக்குவானாக. அதன் மூலம் அவர்கள் அழிவிலிருந்து தப்பிப்பார்களாக.

(முஅல்லிம் எம். நிஸாமுத்தீன்)

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
on 18.05.2018
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516